# தமிழ்த்துறை 2019 – 2020

************************

சர்வதேச யோகா தினம்' 21.06.2019 அன்று நம் கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக யோகா பயிற்றுநர் திரு.கர்மயோகி பால்ராஜ் அவர்கள் கலந்துகொண்டு யோகாசனம் பற்றிய கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

'கர்மவீரர் காமராசர்' பிறந்தநாள் விழா 15.07.2019 அன்று நம் கல்லூரி கலை அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தஞ்சை குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் தமிழடியான் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

'சுவாமி விவேகானந்தர்' பிறந்நநாள் விழா 12.01.2020 அன்று நம் கல்லூரி கலை அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக திருவையாறு ரோட்டரி சங்கத் தலைவர் முனைவர் குப்பு.வீராசாமி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

எமது கல்லூரி தமிழ்த்துறை சார்பில் 'சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள்' எனும் தலைப்பில் 24.02.2020 அன்று ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்க விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கரந்தைக் கலைக்கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் இரா.குருநாதன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

மேலும் தமிழ்த்துறை சார்பாக 27.02.2020 அன்று கவியரங்கம் நடைபெற்றது. இக்கவியரங்க விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தஞ்சைக் கவிஞர் இனியன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.